# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில்அருகில்), எல்டாம்ஸ்ரோடுசந்திப்பு, தேனாம்பேட்டை, சென்னை 600 018. தொலைபேசி எண்: 24347590**

**<u>ஆணை நாள் – 25.02.2015</u>**

**<u>முன்னிலை</u>**

## திரு. S.F.அக்பர், B.Sc., B.L.,
## மாநில தகவல் ஆணையர்

**<u>வழக்கு எண். 46718/F/2014</u>**

திரு. பா.சேகர், .. மேல்முறையீட்டாளர்
ஆர்.11/2, ஆர்.இ.குடியிருப்பு,
மேட்டூர் அணை–1, சேலம் மாவட்டம்.

பொதுத் தகவல் அலுவலர்/செயற்பொறியாளர் (பொது), .. பொது அதிகார அமைப்பு
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
தஞ்சை மின் பகிர்மான வட்டம், தஞ்சாவூர்–613 007.

*****

**<u>ஆணை</u>**

இவ்வாணையத்தில் இன்று (25.02.2015) நடைபெற்ற விசாரணைக்கு மேல்முறையீட்டாளர் திரு. பா.சேகர் மற்றும் பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத் தகவல் அலுவலர் திரு.டி.செந்தில்குமார், செயற்பொறியாளர் (பொது), தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், தஞ்சை மின்பகிர்மான வட்டம், தஞ்சாவூர் ஆகியோர் ஆஜரானார்கள்.

2. மனுதாரர், 02.10.2013 அன்று தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, சட்டப்பிரிவு 19(3)ன் கீழ் தாக்கல் செய்த இரண்டாவது மேல்முறையீட்டின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (25.02.2015) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இம்மேல்முறையீடானது மனுதாரர் 25.03.2013 அன்று தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)ன் கீழ் தாக்கல் செய்த மனு மற்றும் 03.06.2013 அன்று சட்டப்பிரிவு 19(1)ன் கீழ் தாக்கல் செய்த முதல் மேல்முறையீடு ஆகியவற்றின் அடிப்படையில் ஆனதாகும்.

3. மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)ன் கீழ் தாக்கல் செய்த மனுவில், ‘‘தமிழ்நாடு மின்சார வாரியத்தில் நிர்வாகத்தால் உள்நோக்கத்துடனும், அலட்சியத்துடனும், பழிவாங்கும் எண்ணத்துடனும் பாதிக்கப்படும் ஊழியர்களின் மேல்முறையீட்டு கோரிக்கை மனுக்கள் மீது எவ்வளவு நாட்களுக்குள் நடவடிக்கைகள் எடுத்து முடிக்கப்படவேண்டும்’’ என்பன உள்ளிட்ட நான்கு இனங்களுக்கான தகவல்களைக் கேட்டிருக்கிறார்.

4. பொதுத் தகவல் அலுவலர், தனது 02.052013ஆம் நாளிட்ட கடிதம் வாயிலாக ஒவ்வொரு இனத்திற்கும் தகவல் வழங்கியிருக்கிறார். திருப்திகரமான தகவல்களை வழங்கவில்லை எனக்கோரி மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 19(1)ன் கீழ் 03.06.2013ஆம் நாளிட்ட தமது முதல் மேல்முறையீட்டை மேல்முறையீட்டு அலுவலருக்கும், அதனைத் தொடர்ந்து தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 19(3)ன் கீழ் 02.10.2013 அன்று தமது இரண்டாம் மேல்முறையீட்டை இந்த ஆணையத்திற்கும் அனுப்பி வைத்துள்ளார். மனுதாரர் ஆணையத்திற்கு தாக்கல் செய்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீது இன்று (25.02.2015) விசாரணை நடத்தப்பட்டது.

5. விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், இனம்–1ற்கு தகவலாக, தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணியாளர்களால் அளிக்கப்படும் மேல்முறையீட்டு மனுக்களின் மீது, அவை கிடைக்கப் பெற்ற தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் முடிவு செய்யப்படும் என்று தெரிவிக்கிறார். மேலும், இனம்–2, இனம்–3 மற்றும் இனம்–4ஐப் பொறுத்தவரை, மனுதாரர் கேள்வி வடிவில் யூகத்தின் அடிப்படையிலான தகவல்களைக் கேட்டிருக்கிறார். அந்தக் கேள்விகள் அனைத்தும் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப் பிரிவு 2(f)ன் படி ‘‘தகவல்’’ என்னும் இலக்கணத்தின் வரம்பிற்குள் வராது என்பது தெளிவாகத் தெரிகிறது. சட்டப் பிரிவு 2(f)ன் வரையறைக்குட்பட்டு, என்னென்ன தகவல்கள் கேட்கத்தக்கவை – என்னென்ன தகவல்கள் கேட்கத்தக்கவையல்ல என்பன போன்ற சட்டநியதிகள் அனைத்தையும் கருத்தில் கொண்டுதான், மேல்முறையீட்டாளர் தகவல்களைக் கேட்கலாம். கருத்துரைகள், தெளிவுரைகள், விளக்கவுரைகள் போன்றவற்றை தகவல் பெறும் உரிமைச் சட்டத்தில் கேட்க இயலாது. இருப்பினும், விசாரணைக்கு வந்திருக்கும் பொதுத் தகவல் அலுவலர், ஒருவர் பணியில் சேர்வதோ அல்லது பணியிலிருந்து ஓய்வு பெறுவதோ அன்றாடம் நடைபெறும் ஒரு நிகழ்வு என்றும், ஆனால் மின் வாரியம் என்பது நிலையான ஒரு அமைப்பு என்றும், அதில் பணிபுரியும் பணியாளர்களின் குறைகளை சட்டவிதிகளுக்குட்பட்டு களைவது என்பது மின்வாரியத்தின் பொறுப்புதான் என்பதை தெளிவுபடுத்துகிறார். இது தான் மனுதாரருக்கு பொதுத் தகவல் அலுவலர் வழங்கும் தகவலாகும்.

6. ஆக, இந்த வழக்கைப் பொறுத்தவரை, மனுதாரருக்கு அவர் கோரிய அனைத்து இனங்களுக்கான தகவல்களும் வழங்கப்பட்டுள்ள நிலையில், இதில் மேலும் பரிசீலனை செய்ய வேண்டிய வேறு அம்சங்கள் எதுவுமில்லை எனக் கருதி, இந்த மேல்முறையீடு இத்துடன் முடிக்கப்படுகிறது.

**ஒம்/– (எஸ்.எஃப். அக்பர்)**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். 46718/F/2013</u>**
பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர்/செயற்பொறியாளர் (பொது),
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
தஞ்சை மின் பகிர்மான வட்டம், தஞ்சாவூர்–613 007.

**<u>மேல்முறையீட்டாளர்</u>**

திரு. பா.சேகர்,
ஆர்.11/2, ஆர்.இ.குடியிருப்பு,
மேட்டூர் அணை–1,
சேலம் மாவட்டம்.
*jb*